# லீசா இந்தியா – வாசகர் சர்வே முடிவுகள் – 2013

## தமிழ் இதழ்

லீசா இந்தியா உயிர்ச்சூழல் வேளாண்மையை குறைந்த வெளியிடு பொருள் நிலைத்த வேளாண்மை முறையில் பரவலாக்குவதை நோக்கமான கொண்டு காலாண்டு இதழாக வெளியிடப்பட்டு வருகிறது. சர்வதேச அளவில் வெளிவரும் லீசா பத்திரிக்கைக்கு ஒரு இணைப்பு இதழாக துவங்கிய லீசா இந்தியா இதழானது 1999 ஆம் ஆண்டில் இருந்து இந்திய அளவில் தனி இதழாக வெளிவருகின்றது. இந்திய அளவில் தொடங்கப்பட்ட லீசா இந்தியா இதழானது அப்போது 800 வாசகர்களை கொண்டிருந்தது. தற்போது அதன் அச்சு மற்றும் இணைய இதழாக 7000த்திற்கும் அதிகமான வாசகர்கள் பெற்று வருகின்றது.

லீசா இந்தியா தமிழ் இதழானது 2009 ஆம் ஆண்டிலிருந்து வருடத்திற்கு இருமுறை வெளிடப்படுகிறது. அடிப்படையில் இந்த இதழை அடிமட்ட அளவில் உள்ள விவசாயிகள் மற்றும் வளர்ச்சிப் பணியாளர்கள் பெற்றுப் பயனடைகின்றனர். இந்த இதழை அச்சிட்டு வெளிடுவதற்கு மிசெளரியர் என்கிற நிறுவனம் உதவி வருகிறது. தமிழ் இதழ் துவங்கப்பட்டு நான்கு வருடங்கள் முடிவடைந்துள்ள நிலையில் இந்த இதழின் பயன்பாடு குறித்து வாசகர்களின் கருத்துக்களை அறிவதற்கான சரியான தருணமாக நினைத்தோம்.

அதனடிப்படையில் 2013 ஆகஸ்டு மாதத்தில் இந்த வாசகர் சர்வே நடத்தப்பட்டது. 2 பக்க கேள்வித்தாள் மிகவும் எளிய முறையிலும், அதே நேரத்தில் வெளிப்படையாகவும் வடிவமைக்கப்பட்டு வாசகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கிடைத்த பதில்கள் மிகவும் உற்சாகமூட்டுவதாக இருந்தது. வாசகர்களில் 5 விழுக்காடு பேர் சர்வேக்கு தங்களின் பதில்களை அனுப்பியிருந்தனர். அவர்களுக்கு நாங்கள் மிகவும் நன்றியுடையவர்களாக இருக்கிறோம். கீழே கொடுக்கப்பட்டுள்ளது சர்வே முடிவுகளின் ஒரு சாராம்சம்.

### சர்வேயின் முக்கிய அம்சங்கள்

- பதிலளித்தவர்களில் 94 விழுக்காடு பேர்களுக்கு லீசா இந்தியா குறிப்பாக மாற்று வேளாண்மை மற்றும் கள அளவிலான அனுபவங்கள் குறித்த செய்திகளை கொடுத்து உதவியதால் மிகவும் பயனடைந்ததாக தெரிவித்துள்ளனர்.
- பதிலளித்தவர்களில் 89 விழுக்காடு பேர்கள் லீசா இந்தியாவில் வந்த கருத்துகளை பல்வேறு வகையில் பயன்படுத்தியதாக தெரிவித்துள்ளனர்.
- பதிலளித்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் இதனை விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க பயன்படுத்தியதாக தெரிவித்துள்ளனர்.




- பதிலளித்தவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் இதனை தங்கள் நிலங்களில் செய்து பார்த்ததாக தெரிவித்துள்ளனர்.
- பதிலளித்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேற்பட்டவர்கள் இந்த கருத்துக்களை உழவர்களுக்கு கூட்டங்களின் போது பகிர்ந்து கொண்டதாக தெரிவித்துள்ளனர்.
- இதழ் மேலும் அதிக அளவு மக்களை சென்றடையவும், விவசாயிகளுக்கு மாவட்ட அளவில் கூட்டங்கள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்பட வேண்டும் எனவும் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

## ஏன் லீசா இந்தியா படிப்பதற்கு ஆர்வமுடையதாக இருந்தது ?

பதிலளித்தவர்களில் 94 விழுக்காடு பேர்கள் இதழ் படிப்பதற்கு மிகவும் ஆர்வமுடையதாக இருந்ததாக உணர்கின்றனர்.

59 விழுக்காடு பேர்கள் லீசா இந்தியா மாற்று வேளாண் முறைகள் குறித்த விழிப்புணர்வை கொடுத்ததாகவும், 31 விழுக்காடு பேர்கள் அதில் வெளிவந்த தகவல்கள் கள அனுபவங்களாக இருந்ததால் பிடித்ததாகவும் தெரிவித்தனர்.




## லீசா இந்தியா எப்படி பயன்படுத்தப்பட்டது ?

பதிலளித்தவர்களில் 89 விழுக்காடு பேர்கள் இதழில் வெளிவந்த கருத்துக்களை எப்படி தாங்கள் பயன்படுத்திக் கொண்டோம் என்பதை தெரிவித்திருந்தனர்.

லீசா இந்தியா அதிகளவு பயிற்சி கையேடாக பயன்படுத்தப்பட்டதாகவும், 50 விழுக்காடு பேர்கள் அதனை விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கவும், 11 விழுக்காடு பேர்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு பயிற்சி அளிக்க பயன்படுத்திக் கொண்டதாக தெரிவித்திருந்தனர் 35 விழுக்காடு பேர்கள் இதழின் கருத்துக்களை மாற்று வேளாண் முறைகளை நடைமுறையில் பயன்படுத்தி கொண்டதாக தெரிவித்திருந்தனர்.




**லீசா பரவலாகி வருகிறது.**

லீசா கருத்தாக்கம் குறிப்பிடத்தக்க அளவு பரவலாகி வருகிறது.

91 விழுக்காடு பேர்கள் இதழில் கருத்துக்களை மற்றவர்களுக்கு கூட்டங்கள், பயிற்சிகள் மற்றும் கருத்தரங்கங்கள் வாயிலாக பகிர்ந்து கொள்கின்றனர். 54 விழுக்காடு பேர்கள் தனிப்பட்ட அளவில் கருத்துக்களை 1–50 மக்களுடன் சிறிய கூட்டங்கள், பயிற்சிகள் மற்றும் இதர ஒன்றுகூடல் தருணங்களில் பகிர்ந்து கொள்கின்றனர். 14 விழுக்காடு பேர்கள் இதழின் கருத்துக்களை பெரிய கூட்டங்களில் 50–100 விவசாயிகளிடம் பகிர்ந்து கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

**வாசகர்களின் கருத்துக்கள்**

*தீவனங்கள் மற்றும் இயற்கை வேளாண்மை குறித்த கட்டுரைகள் மிகவும் அருமை – வேலுசாமி. எஸ். ஆர்., தாராபுரம்*

*புதிய கருத்துக்களை லீசா மூலம் கற்றுக் கொண்டேன். – விஜயகுமாரி, வளர்ச்சிப்பணியாளர், வேலூர்.*

*விவசாய சமூகத்தோடு தொடர்பு வைத்துக் கொள்வதற்கு எங்கள் நிறுவனத்திற்கு இந்த இதழ் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. – கோபிராஜன், வளர்ச்சி பணியாளர், வேலூர்.*

*பகுதிவாரியான உணவு முறைகள் மற்றும் உயிரினப் பன்மய பாதுகாப்பு குறித்த கட்டுரைகள் மிகவும் ஆர்வமூட்டக்கூடியதாக இருந்தது. – சாகுல் ஹமீது, வளர்ச்சி பணியாளர், கன்னியாகுமரி.*

*லீசா இதழை அனைத்து நூலகங்கள், வேளாண் கல்லூரிகள் மற்றும் இயற்கை உரங்கள் தயாரிக்கும் அனைத்து கம்பெனிகளுக்கும் அனுப்பி வைக்க வேண்டும் – பரமேஸ்வரன், வளர்ச்சி பணியாளர், ஈரோடு.*

*மாவட்ட அளவில் வாசகர்கள் கலந்துரையாடல் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் – கொண்டல்செட்டி. கே.பி விவசாயி, திண்டுக்கல்.*


**LEISA India, AME Foundation, # 204, 100 Feet Ring Road, 3rd Phase, Banashankari 2nd Block, 3rd Stage, Bangalore – 560085; E-mail: leisaindia@yahoo.co.in**
**www.leisaindia.org; www.amefound.org**